பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது *2*
ஆலமரம் வேர்களின்றி அலைகின்றது
அந்திமத்தில் யாரும் இன்றி அழுகின்றது

பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது

ஆற்றினிலே நீருமில்லைம ஆதரிப்பார் யாருமில்லை
நேற்றிருந்த சொந்தமெல்லாம் நேரினிலே இன்று இல்லை *2*

பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது

நாய் வளர்த்துப் பாலை வார்த்தால் வாளையாட்டிக் கொள்ளும்
நம்பிப் பெற்ற பிள்ளைகளோ நன்றியினைக் கொல்லும் *2*
கோவிலுண்டு பூசை செய்ய யாருமிங்கு இல்லை
கொள்ளியிடக் கூட ஒரு பிள்ளையிங்கு இல்லை

பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது

கட்டிலுக்கு வந்தவளும் என்னைவிட்டுப் போனாள்
தொட்டில் வந்த பிள்ளைகளோ தூரதேசம் போனார் *2*
விட்டபடி சுத்துதடா பூமியென்ற பந்து
இரத்தபாசம் என்பதெல்லாம் இங்கு வெறும் பேச்சு

பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது
ஆலமரம் வேர்களின்றி அலைகின்றது
அந்திமத்தில் யாரும் இன்றி அழுகின்றது
ஆற்றினிலே நீருமில்லைம ஆதரிப்பார் யாருமில்லை
நேற்றிருந்த சொந்தமெல்லாம் நேரினிலே இன்று இல்லை *2*
பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது
பூங்குருவி துணைகளின்றித் துடிக்கின்றது